2025 நவம்பர் மாதம் 13 – ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 134/2023

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – சந்திரவதனா |
| தந்தை பெயர்: | வேலுச்சாமி |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கணக்குப்பட்டாயர் பயிற்சி |
| வயது : | 52 |

தேதி : 13.11.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் இந்நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்கள் அலுவலக கணக்குப் பட்டாயர் திரு.பவானி சங்கர் லால் அவர்கள் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கிய அனுமதி கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.10** ஆகும். விபத்தில் இறந்துபோன செந்தில்பிரபு என்பவர் எங்கள் நிறுவனத்தில் வருடா வருடம் வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்காக வந்து செல்வார். விபத்தில் இறந்துபோன செந்தில்பிரபு என்பவர் எங்கள் நிறுவனத்தில் அவர் கொடுக்கும் வங்கிக் கணக்குகளுக்கேற்ப அவருக்கு வருமான வரி கணக்குத் தாக்கல் செய்வோம். 2019–2020 ம் வருமான வரி ஆண்டிற்குரிய செந்தில்பிரபு என்பவரின் வருமான வரி கணக்கு நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.11** ஆகும். மேற்படி ம.சா.ஆ.11 வருமான வரி கணக்கில் அவருடைய மொத்த வருமானமாக ரூ.6,21,290/– என

காட்டப்பட்டுள்ளது. 2020−2021ம் வருமான வரி ஆண்டிற்குரிய செந்தில்பிரபு என்பவரின் வருமான வரி கணக்கு நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.12** ஆகும். மேற்படி ம.சா.ஆ.12 வருமான வரி கணக்கில் அவருடைய மொத்த வருமானமாக ரூ.4,89,270/− என காட்டப்பட்டுள்ளது. 2021−2022ம் வருமான வரி ஆண்டிற்குரிய செந்தில்பிரபு என்பவரின் வருமான வரி கணக்கு நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.13** ஆகும். மேற்படி ம.சா.ஆ.13 வருமான வரி கணக்கில் அவருடைய மொத்த வருமானமாக ரூ.4,98,530/− என காட்டப்பட்டுள்ளது. 2022−2023ம் வருமான வரி ஆண்டிற்குரிய செந்தில்பிரபு என்பவரின் வருமான வரி கணக்கு நகல் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.14** ஆகும். மேற்படி ம.சா.ஆ.14 வருமான வரி கணக்கில் அவருடைய மொத்த வருமானமாக ரூ.4,99,390/− என காட்டப்பட்டுள்ளது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:−

நான் ஆடிட்டர் அலுவலகத்தில் கடந்த 15 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய கல்வித் தகுதி M.Com., ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி கணக்கை அந்த நபர் கொண்டுவரும் ஆவணங்களை வைத்து தயார் செய்து தாக்கல் செய்வோம் என்றால் சரிதான். செந்தில்பிரபு என்னென்ன ஆவணங்களை எங்கள் அலுவலகத்தில் கொண்டு வந்தார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும், அவருடைய ஒவ்வொரு வருடத்திற்குரிய அனைத்து வங்கிக் கணக்கு பரிவர்த்தனைகளையும், அத்துடன் அந்தந்த வருடத்தின் விற்ற மற்றும் வாங்கிய சொத்துக்களின் ஆவணங்களையும் கொண்டு வந்து கொடுத்தார். நான் சொன்ன மேற்குரிய ஆவணங்கள் அனைத்தும் இறந்துபோன செந்தில்பிரபுவின் தாயாரான மனுதாரர் வசம் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன செந்தில்பிரபு எங்கள் நிறுவனத்தில் கொண்டு வந்து காட்டக்கூடிய ஆவணங்களின் உண்மைத்தன்மை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.14 வரையிலான ஆவணங்களின் Trading Accounts, Profit and Loss

Accounts, Balance Sheet இணைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன செந்தில்பிரபு கட்டுமான கான்ட்ராக்ட் செய்து வந்தார். அவர் மேற்சொன்ன தொழிலை விட வேறு எந்த தொழிலும் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன செந்தில்பிரபு என்ன வகையான தொழில் செய்து வந்தார் என்ற விபரம் ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.14 வரையிலான வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்துபோன செந்தில்பிரபு என்பவருக்கு தாக்கல் செய்த ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.14 வரையிலான வருமான வரி கணக்குகளில் வீட்டுக்கடன் பெற்றதாக சொல்லியுள்ளதில் தற்போது அந்த கடன் நிலுவையில் உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் இறந்த பிறகு எனக்கு தெரியாது. 2019-2020ம் வருடத்திற்குரிய ம.சா.ஆ.11 ஆவணத்தில் Opening Stock -ஆக ரூ.24,75,200/- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணத்தில் Opening Stock என்று சொல்லியுள்ளதில் என்ன வகையான பொருட்கள் இருந்தது என்பதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். இறந்துபோன செந்தில்பிரபு Stock Register வைத்திருந்தார் என்றால் இருக்கலாம். கொள்முதல்களின் பில்களை சரிபார்த்து தான் வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன். இறந்துபோன செந்தில்பிரபு கொடுத்த கணக்குகளை வைத்து ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றும், அவருடைய கணக்குகள் இந்த வழக்கிற்காக அதிகப்படுத்தி ஏற்படுத்திக்கொண்ட கணக்கு என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.11.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/- Thiru.C.Sankar, B.A., M.L., PGDCFS.,
கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
13.11.2025